[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *(குறுக்கீடுகள்)*

2. அறிவிப்புகள்

(அ) பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவைகள் மற்றும் தமிழ்நாடு நில மேம்பாட்டுக் குழுமம் ஆகியவற்றிற்கு உறுப்பினர்கள் நியமனம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. கீழ்க்காணும் அமைப்புகளில் உள்ள காலியிடங்களுக்கு மாண்புமிகு உறுப்பினர்களிடமிருந்து முறையாக வேட்பு மனுக்கள் வரப்பெற்றுள்ளன:

1. அண்ணாமலைப் பல்கலைக்கழகம் (ஆட்சிமன்றப் பேரவை)	1. திரு. ப. இராஜரெத்தினம் 2. திரு. ஜி. கோதண்டராமன் 3. திரு. துரை கி. சரவணன்
2. சென்னைப் பல்கலைக்கழகம் (ஆட்சிமன்றப் பேரவை)	1. திரு. சி. துரைராஜ்
3. தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் (ஆட்சிமன்றப் பேரவை)	1. முனைவர் செ.கு. தமிழரசன்
4. தமிழ்நாடு நில மேம்பாட்டுக் குழுமம்	1. திரு. செ. தாமோதரன் 2. திரு. பி.ஜி. இராஜேந்திரன் 3. திரு. என்.ஆர். ரங்கராஜன்

தேர்ந்தெடுக்கப்பெற வேண்டிய உறுப்பினர்களுடைய எண்ணிக்கையும் முறையாக வரப்பெற்றுள்ள வேட்பு மனுக்களின் எண்ணிக்கையும் சமமாக இருப்பதால் வேட்பு மனு அளித்த மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அந்தப் பதவிகளுக்கு முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன்.

அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர்களுடைய பதவிக் காலம் 5–12–2007 வரை ஆகும்.

2005 ஏப்ரல் 11] [பேரவைத் தலைவர்]

சென்னைப் பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினரின் பதவிக் காலம் 6–5–2006 வரை ஆகும்.

தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினரது பதவிக் காலம் 21–11–2007 வரை ஆகும்.

தமிழ்நாடு நில மேம்பாட்டுக் குழுமத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர்களுடைய பதவிக் காலம் தேர்ந்தெடுக்கப்பட்ட நாளிலிருந்து மூன்று ஆண்டுகளாகும்.

தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர் ஏதாவதொரு காரணத்திற்காகப் பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால், அந்த நாளோடு அவருடைய உறுப்பினர் பதவியும் முடிவடையும்.

(ஆ) பேரவை அலுவலில் மாற்றம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை அலுவல்கள் குறித்து ஏற்கெனவே— திரு. புகழேந்தி சொல்லிவிட்டீர்களா? — அறிவிக்கப்பட்ட நிகழ்ச்சி நிரலில் கீழ்க்காணும் மாற்றம் பேரவையின் ஒப்புதலோடு செய்யப்படுகின்றது:

8–4–2005 அன்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் முன்மொழியப்பெற்ற மானியக் கோரிக்கைகள்மீதான விவாதம் இன்றும் தொடர்வதால், இன்று மாலை எடுத்துக் கொள்ளப்படுவதாக இருந்த மானியக் கோரிக்கை எண் 47 – இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை மீதான விவாதமும் வாக்கெடுப்பும் நாளை (12-4-2005) காலை எடுத்துக்கொள்ளப்படும்.

அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. (குறுக்கீடுகள்) திரு. எ.வ. வேலு அவர்கள். (குறுக்கீடுகள்)

3. தகவல் கோரல்

(அ) உறுப்பினர்களின் முன்னறிவிப்புகள்

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

திரு. கே.ஆர். ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...